T3-வடிவியல் மற்றும் செய்முறை வடிவியல்
மாதிரி வினாத்தாள் VIII

8th Standard

**கணிதம்**

Reg.No. :

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

Time : 01:15:00 Hrs

Total Marks : 30

## பகுதி -அ

5 x 1 = 5

1) முக்கோணத்தின் மையக் கோடுகள் சந்திக்கும் புள்ளி____________

(a) உள் வட்ட மையம் (b) வட்ட மையம் (c) செங்கோட்டு மையம் (d) நடுக்கோட்டு மையம்

2) முக்கோணத்தின் கோண இரு சம வெட்டிகள் சந்திக்கும் புள்ளி__________

(a) உள் வட்ட மையம் (b) வட்டம் மையம் (c) செங்கோட்டு மையம் (d) நடுக்கோட்டு மையம்

3) முக்கோணத்தின் மையக் குத்துக் கோடுகள் சந்திக்கும் புள்ளி________

(a) உள் வட்ட மையம் (b) சுற்று வட்ட மையம் (c) செங்கோட்டு மையம் (d) நடுக்கோட்டு மையம்

4) விட்டத்திற்கும் ஆரத்திற்குமுள்ள தொடர்பு___________

(a) ஆரம் = 2 × விட்டம் (b) ஆரம் = விட்டம் + 2 (c) விட்டம் = ஆரம் + 2 (d) விட்டம் = 2 × ஆரம்

5) வட்டத்தின் மிகப் பெரிய நாண்_______________

(a) ஆரம் (b) வெட்டுக் கோடு (c) விட்டம் (d) தொடுகோடு

## பகுதி -ஆ

5 x 2 = 10

6) $\Delta$ ABC இல் $\angle$B=90°, AB = 18 செ.மீ. மற்றும் BC = 24 செ.மீ. எனில் AC இன் நீளம் காண்க.

7) சதுரத்தின் சுற்றளவு 40 செ.மீ எனில் அதன் மூலை விட்டங்களின் நீளங்களின் கூடுதல் என்ன?

8) படத்தில் $\Delta$PQR இல், PT செங்கோடு. மேலும் PQ = 25 செ.மீ., PR = 17 செ.மீ. மற்றும் PT = 15 செ.மீ., QR = x செ.மீ. எனில் x இன் மதிப்பு காண்க.

9) செவ்வக வடிவ வயலின் நீள அகலங்கள் முறையே 40மீ, 30மீ மூலைவிட்டத்தின் வழியே ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலையை அடைந்தால் மீதப்படுத்தப்படும் தூரம் எவ்வளவு?

10) 3 செ.மீ மற்றும் 5 செ.மீ ஆகிய ஆர அளவுகளுடைய பொதுமைய வட்டங்கள் வரைந்து வட்ட வலயத்தை நிழலிட்டுக் காட்டுக. அதன் அகலத்தையும் காண்க.

## பகுதி - இ

5 x 3 = 15

11) $\Delta$ PQR இல் $\angle$P = 25° , $\angle$Q = 65° எனில் $\Delta$PQR செங்கோண முக்கோணம் ஆகுமா? மேலும் PQ = 4 செ.மீ., PR = 3 செ.மீ. எனில் QR இன் நீளம் காண்க.

12) ஒரு ஏணி 16 அடி உயரத்தில் உள்ள இரண்டாவது மாடி சன்னலின் கீழ்ப் பகுதியைத் தொடுமாறு உள்ளது. ஏணியின் அடிப்பாகம் தரையில் 12 அடி தொலைவில் உள்ளது. வண்ணம் பூசுபவர் வண்ணங்களைக் கலக்கும்போது பக்கத்து வீட்டுக்காரரின் நாய் ஏணியைத் தள்ளி விடுவதால் ஏணி மேலும் 2 அ டி தொலைவு நகர்கிறது எனில் ஏணி தொடும் உயரத்தைக் காண்க.

13) வரையறு: தொடுகோடு மற்றும் வெட்டுக்கோடு

14) கொடுக்கப்பட்டுள்ள ஆர அளவுகளையுடைய பொதுமைய வட்டங்கள் வரைந்து வட்ட வலயத்தின் அகலத்தைக் கண்டுபிடிக்க. 3.5 செ.மீ. மற்றும் 5.5 செ.மீ.

15) கொடுக்கப்பட்டுள்ள ஆர அளவுகளையுடைய பொதுமைய வட்டங்கள் வரைந்து வட்ட வலயத்தின் அகலத்தைக் கண்டுபிடிக்க. 5 செ.மீ. மற்றும் 6.5 செ.மீ.

*****************************************